## சுருக்கம்

பணியமைப்பு – ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை – அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களை உள்ளடக்கி அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் புதிய அலுவலகம் தோற்றுவித்தல் – ஆணைகள் – வெளியிடுதல்.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (என்) துறை**

**அரசாணை (நிலை) எண்.157** **நாள் : 07.11.2012**

ஐப்பசி – 22
திருவள்ளுவர் ஆண்டு 2043

**படிக்க :**

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அவர்களின் கடித எண். ஆ1/14665/2008, நாள் 17.04.2008, 30.08.2011 மற்றும் 04.08.2012.

***********

**ஆணை**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் தனது கடிதத்தில் பொதுப் பணிகளில் நேர்மையைக் கருதி அரசாணை (நிலை) எண்.224, பொது பணிகள் (பி) துறை, நாள்.12.2.1964 மற்றும் அரசாணை (நிலை) எண்.567, பொதுப்பணி (பி) துறை, நாள் 26.03.1964–இல் இயக்குநரகத்தின் 15 பிரிவு அலுவலகங்கள் (13 பிரிவு, மாவட்டங்களிலும், 2 பிரிவு, சென்னை மாநகரிலும்) தோற்றுவிக்கப்பட்டன என்றும் 1964 ல் இத்துறை தோற்றுவிக்கப்பட்டபோது இருந்த பணிச்சுமை தற்சமயம் பல மடங்காக உயர்ந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

2) மேலும் மாவட்ட நிர்வாகத்தின் பணிச்சுமையைக் கருத்தில் கொண்டு, அரசு முந்தைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை பிரித்து கரூர், பெரம்பலூர், அரியலூர் என மூன்று புதிய வருவாய் மாவட்டங்களை தோற்றுவித்துள்ளது என்றும் இம்மூன்று புதிய மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் பிரிவு அலுவலகம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் கூறியுள்ளார். அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களிலுள்ள பொது மக்களின் ஊழல் தொடர்பான புகார்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பிரிவு அலுவலகம் தொடங்கப்பட வேண்டியது தவிர்க்க இயலாத உடனடி தேவை எனவும் அதனால், அவ்விரண்டு மாவட்டங்களிலுள்ள பொது மக்களின் நன்மைக்காகவும், அரசுத்துறை அலுவலகங்கள் சிறப்பாக செயல்பட ஏதுவாகவும், அங்கு ஒரு புதிய பிரிவு அலுவலகம் தொடங்கப்பட வேண்டும் என்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் கூறியுள்ளார்.

(த.பி.பா

3) புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரியலூர் பிரிவு அலுவலகத்திற்கு, தேவையான பணியிடங்கள், தேவையான கருவிகள், தளவாடப்பொருட்கள் முதலியவற்றை மறுபகிர்மானம் அடிப்படையில் பிரித்து அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பிரிவினை துவக்கலாம் எனவும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நகர பிரிவு ஒன்றிற்கு அரசாணை (நிலை) எண்.2635, உள்துறை, நாள் 15.09.1959 –இன் மூலம் ஒப்பளிக்கப்பட்ட ஒரு துணை காவல் கண்காணிப்பாளர் பணியிடமும், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பிரிவிலிருந்து அரசாணை (நிலை) எண்.214, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (என்) துறை, நாள் 11.12.2001–இன் மூலம் ஒப்பளிக்கப்பட்ட ஒரு காவல் ஆய்வாளர் பணியிடமும் சிறப்பு புலனாய்வு பிரிவு சென்னை பிரிவிலிருந்து அரசாணை (நிலை) எண்.17, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (என்) துறை, நாள் 20.01.1997–இன் மூலம் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு தலைமைக் காவலர் பணியிடங்களும், மூன்று காவலர் பணியிடங்களும் மறு பகிர்மானம் மூலம் ஒப்பளிக்கலாம் எனவும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) மேலும், மறு பகிர்மானம் மூலம் மேற்கண்ட பணியிடங்கள் ஒப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அந்த பணியிடங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாகனம், வாகன எரிபொருள், தொலைபேசி, அறைகலன்கள், கணினி மற்றும் தொடர்புடைய அனைத்தும் புதிதாக உருவாக்கப்படவிருக்கும் அரியலூர் பிரிவுக்கு மாற்றப்பட்டு பயன்படுத்திக் கொள்ளப்படும் என்பதால் அரசுக்கு கூடுதல் தொடர் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

5) எனவே, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அவர்கள் கீழ்க்காண்பவற்றின் மீது அரசின் ஆணையினைக் கோரியுள்ளார்.

i) அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களை உள்ளடக்கி அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் புதிய பிரிவு அலுவலகம் தொடங்குவது, மேலும் அப்பிரிவிற்கு தேவையான பணியாளர்கள் (ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், ஒரு காவல் ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 3 காவலர்) கருவிகள் மற்றும் தளவாடப் பொருட்கள் மறுபகிர்மான அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுதல்.

ii) மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவு அலுவலகம் இயங்குவதற்கு மின்கட்டணம் மற்றும் அலுவலக கட்டட வாடகை கட்டணம் ஆகியவற்றிற்குரிய நிதி ஒதுக்கீடு ரூ.1,80,000/– (மின் கட்டணம் ரூ.60,000/– + வாடகை ரூ.1,20,000/–) .

(த.பி.பா

6) மேற்காணும் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து,

i) அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களை உள்ளடக்கி அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் புதிய பிரிவு அலுவலகம் தோற்றுவித்தும் மற்றும் அப்பிரிவு இயங்குவதற்கான பணியாளர்கள் (ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், ஒரு காவல் ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 3 காவலர்) கருவிகள், தளவாடப் பொருட்கள் மேலே பத்தி 3 மற்றும் 4–இல் தெரிவித்துள்ளவாறு மறுபகிர்மான அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் ,

ii) மேலே தெரிவிக்கப்பட்ட அரியலூர் பிரிவு அலுவலகம் இயங்குவதற்கு மின்கட்டணம் மற்றும் அலுவலக கட்டட வாடகை கட்டணம் ஆகியவற்றிற்கு ஆண்டுக்கு ரூ.1,80,000/– (மின் கட்டணம் ரூ.60,000/– + வாடகை ரூ.1,20,000/–) நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணையிடப்படுகிறது.

7) மேலே பத்தி 6(ii) –ல் காணும் செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2070 – 00 – ஏனைய நிருவாகப் பணிகள் – 104 –
விழிப்புப் பணி – I – திட்டத்தில் சேராதது AA –
விழிப்புப்பணி – இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் –

i) 05 – அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள்"
( த.தொ.கு. 2070 – 00 – 104 – AA – 0539)

ii) 06 – வாடகை, கட்டண வீதங்கள், வரிகள்– 01 வாடகை"
( த.தொ.கு. 2070 – 00 – 104 – AA – 0619)

8) மேலே பத்தி 6 (ii) –இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீடு 2012-13–இல் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அவர்கள் இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறார். 2012-13–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான முன்மொழிவுகளை நிதி (பொது) த்துறைக்கு அனுப்பி வைக்கும்போது இதனையும் தவறாது சேர்த்து அனுப்பி வைக்குமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(த.பி.பா

9) இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.59781/பொது/2012, நாள் 06.11.2012 –இல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1554 –இல் (ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்து நான்கு) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ.இறையன்பு,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்:
இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை– 28.
மாவட்ட ஆட்சியர், அரியலூர் / பெரம்பலூர்
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.

நகல்.
முதுநிலை நேர்முக உதவியாளர், நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், பள்ளிக் கல்வி , விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை, சென்னை–9.
நிதி (பொது) / வ.செ. II) த்துறை, சென்னை–9.
விழிப்புப்பணி ஆணையம், சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

// True Copy //

14/5/13
பிரிவு அலுவலர்

14/05/13